## செயற்பொறியாளர், நீஆது., வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: *பொறி. க.குருசாமி, எம்.இ.,(கட்டமைப்பு), எம்.ஐ.இ.,*
செயற்பொறியாளர், நீ.ஆ.து.,

***

**செயல்முறை கடித எண். நி௨ 2 / 11 / 2019 (1207)/நாள்.24.12.2019.**

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – திரு.கு.ராஜ்குமார், இளநிலை உதவியாளர் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்.3(3)/25366/2019/ நாள்.25.02.2019.
2. உதவி செயற்பொறியாளர், நீஆது., இருக்கன்குடி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம் எண்.1, விருதுநகர் அவர்களின் கடித எண்:கோ–1/2019/உசெபொ-1/நாள்:17.12.2019.

***

பார்வையில் காணும் கடிதங்களின்படி முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டி தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ஆம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இக்கோட்ட அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள, இருக்கன்குடி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம் எண்.1, விருதுநகரில் இளநிலை உதவியாளராக பணியமர்வு செய்யப்பட்ட திரு.கு.ராஜ்குமார், 11.03.2019 பிற்பகல் முதல் பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதி 23 (எ) (1)–ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 11.03.2019 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இவர் மூன்று ஆண்டுகால தேர்ச்சி பணியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இந்த பணிவரன்முறை ஆணை சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

24/12/19

செயற்பொறியாளர், நீஆது.,
வைப்பாறு வடிநில கோட்டம்,
விருதுநகர்.

24.12.19

பெறுநர்
திரு.கு.ராஜ்குமார், இளநிலை உதவியாளர்,
இருக்கன்குடி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம் எண்.1,
விருதுநகர்.

(வழி) உதவிசெயற்பொறியாளர், நீஆது., இருக்கன்குடி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம் எண்.1, விருதுநகர்.

நகல்: உதவி செயற்பொறியாளர், நீஆது., இருக்கன்குடி நீர்த்தேக்க திட்ட உபகோட்டம் எண்.1, விருதுநகர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.